**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 04/2021**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | அன்பழகன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 29.01.2026.

**3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே நடந்த பரிவர்த்தனைகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் கூட இருந்து செய்தேன். வாதி அவரை ஏமாற்றிவிட்டு வேறு ஒருத்தருக்கு விற்றுவிட்டதாக பரிகாரம் கேட்டுள்ளார். எத்தனை மனை ஏமாற்றி விற்றதாக சொல்கிறேன் என்றால் 65 மனை.

2. அப்படி என்றால் ஏமாற்றிவிட்ட 65 மனைகளை திரும்ப வாங்கி கொடுக்கசொல்லி வழக்கு போட்டதாக சொல்கிறேனா என்றால் ஆமாம். முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி தயார் செய்தது. 65 மனைகளை ஏமாற்றி விற்றதாகவும் அதை வாங்கி கொடுக்கசொல்லி வழக்கு போட்டதாகவும் சாட்சியம் அளிக்க தான் வாக்குமூலம் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம்.

3. எனக்கு வழக்கு பற்றிஎதுவும் தெரியாது என்றாலும் வாதிகள் கேட்டுக்கொண்டபடி சாட்சியம் அளிக்க பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 19.04.2014 தேதியிட்ட விக்கிரய ஒப்பந்தத்தை 3ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்களா என்றால் அதை பதிவு செய்யவில்லை. அந்த ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான், ஆனால் மலர் எனது மனைவி அவர் தான் சொத்தை வாங்கினார் அதனால் நான் உடன் இருந்தேன்.

4. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 2014 ஆண்டுக்கான கிரய ஒப்பந்தத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் 19.04.2014 ஒப்பந்தத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் அதன் அசல் கஜேந்திரனிடம் உள்ளது. கஜேந்திரன் யார் என்றால் எங்களுடன் இருந்த ஒரு பங்குதாரர். மேற்படி விவரத்தை தாவாவிலோ எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் தெரியவில்லை.

5. பதிவு செய்யப்படாத ஆவணத்தின் ஒளிநகலை வைத்துக்கொண்டு 3ஆம் பிரதிவாதியிடம் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி ஆவணங்கள் சரியாக இருந்தால் அதன் அடிப்படையில் பதிவு செய்வார்கள் என்றாலும் அதை தடை செய்ய முடியாது என்றால் சரிதான். என் மனைவிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் முன்னுக்கு பின் முரணாக தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சியத்தின் படி நாங்கள் கோரியுள்ள பரிகாரம் தவறானவை என்றாலும் அதனால் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.